**இரத்தினபுரி மாநகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி சபைக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி மாநகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டில் கூடுதலாக குறிப்பிடப்பட்டிருந்த மோடார் வாகன மற்றும் மாட்டு வண்டி கணக்கின் ரூபா 550,000 ஆன ஆரம்ப மீதியை மீளாய்வாண்டிலும் சரி செய்திருக்கவில்லை. | சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு கணகினூடாக சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |
| (ஆ) | வேலையொன்றிற்காக மீளாய்வாண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய ரூபா 975,201 கணக்கீடு செய்திருக்கவில்லை. | வருடத்திற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு கணகினூடாக சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |
| (இ) | மீளாய்வாண்டில் கொள்ளவனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 249,872 பெறுமதியான நூலக புத்தகங்கள் கணக்கீடு செய்திருக்கவில்லை. | கொள்வனவு மற்றும் நன்கொடை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு கணகினூடாக சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது காணியொன்றை சுவீகரித்துக்கொள்வதற்கு பிரதேச செயலாளர் அலுவகமொன்றில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4,200,000 ஆன தொகையை மூலதன செலவாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2019 ஆண்டு கணகினூடாக சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் மூலதன செலவு அவ் அளவினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | பிரதேச செயலக ஒதுக்கீட்டின் மூலம் கடந்த ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 03 வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 582,734 ஆன தொகை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஊ) | முன்னைய ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 03 வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 667,388 ஆன தொகைக்காக கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2019 ஆண்டு கணகினூடாக சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |
| (எ) | முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 86,065 ஆன தொகையை மீளாய்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டு கணகினூடாக சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |
| (ஏ) | சபையின் 03 நடைமுறை கணக்குகளின் நிதிக் கூற்றுகள் பிரகார மீதி மற்றும் சுருக்கமான காசேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் கூட்டுத் தொகை ரூபா 11,918,583 ஆன வித்தியாசம் நிலவியது. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு தீர்க்க வேண்டும். | தற்போது இதனை பரிசீலனை செய்துக்கொண்டிருப்பதுடன் தவரை கண்டறிந்ததுடன் அதனை 2019 ஆண்டின் கணக்குகளில் சரியாக காட்டுகிறேன். |
| (ஐ) | ஊழியர் கடன் பெறுவனவு ரூபா 128,050 ஆன தொகை குறைத்தும் ஊழியர் கடன் கொடுப்பனவு ரூபா 160,000 ஆன தொகை கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஊழியர் கடன் பெறுவனவுகளின் சுருக்கமான காசு புத்தகதிதில் குறைத்துக்காட்டப்பட்ட ரூபா 128,050 ஆன தொகை சரி செய்யப்பட்டதுடன் கொடுப்பனவாக காட்டப்பட்டிருந்த ரூபா 160,000 ஆன தொகை 2019 நிதிக் கூற்றுடன் சீர் செய்வதற்கு குறித்திற்கொண்டேன். |
| (ஒ) | வாடி வீடு வாடகை ரூபா 1,123,888 ஆன தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடத்திற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | அட்டுறு அடிப்படையில் வாடி வீடு வாடகை பில் இடல் ரூபா 2,275,630 ஆன தொகையை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 06 கணக்கு விடயங்களுக்குரியதாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் துணை பதிவேடுகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 31,731,157 வித்தியாசம் ஆனது. | நிதிக் கூற்றுகள் மற்றும் துணை பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட மீதி சரியாக காட்டப்பட வேண்டும். | 2019 ஆண்டு கணகினூடாக சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |
| (க) | 05 வருமான தலைப்புகளுக்குரியதாக மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளின் மீதிகளிற்கிடையில் ரூபா 688,845 வித்தியாசம் ஆனது. | நிதிக் கூற்றுகள் மற்றும் துணை பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட மீதி சரியாக காட்டப்பட வேண்டும். | இந்த கணக்கு மீதிகளிற்கிடையில் நிலவும் வித்தியாசத்தை துரிதமாக சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (கா) | கூட்டுத் தொகை ரூபா 2,159,688 தொகையான 02 கணக்கு விடயங்களை பரிசீலனை செய்வதற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். | சான்றுறுதி கடிதம் கோரி அனுப்பப்பட்டுள்ளதுடன், சான்றுறுதி கடிதம் கிடைத்த பின்னர் பேரேடுனூடாக கணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 571 | 2001 முதல் 2016 வரை காலப்பகுதிக்குரிய ரூபா 3,671,229 பெறுமதியான காலம் கடந்த வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | வருமானத்திற்கு எடுக்க முடியுமான வைப்பு இனங்கண்டு வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.3 பந்தி | சபைக்கு சொந்தமான 18 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில் லாததுடன் 03 வாகனங்களின் எரி பொருள் பாவனை தொடர்பாக அவதானிக்கப்பட்ட | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதில் வழங்கப்பட வில்லை. |

வேறுபாடுகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 68,672,792 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 90,472,449 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 30,500,000 | 29,175,731 | 26,021,465 | 28,962,158 | 32,000,000 | 31,088,136 | 30,494,091 | 26,806,840 |
| (ii) | வாடகை | 68,398,946 | 66,152,480 | 63,173,522 | 28,362,641 | 63,165,069 | 70,584,039 | 66,602,133 | 27,986,516 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,723,000 | 3,073,149 | 3,073,149 | - | 5,997,100 | 2,424,403 | 2,424,403 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 77,862,450 | 78,936,190 | 47,332,292 | 37,628,458 | 74,524,800 | 64,260,941 | 64,370,364 | 18,342,730 |

#### 2.2.2 வாடகை

**நிலக் குத்தகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வதிவிட, வியாபார மற்றும் பயிர்செய்கை நடவடிக்கைகளுக்காக பலதரப்பட்ட நபர்களுக்கு மாநகர சபைக்கு சொந்தமான 468 நில அலகுகள் வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2014 செப்தெம்பர் 11 ஆம் திகதிய மகா சபை குழு 6:1 கொண்ட ஒருமைபாட்டினூடாக மதிப்பீட்டு குத்தகையின் 25 சதவீதம் | சபையினால் வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2014 ஆண்டில் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து கிடைத்திருந்த மதிப்பீட்டு தொகை மிகக் பெறுமளவில் நிலவியது. இவவாறு முதற்தடவையாக நிகழ்ந்ததனால் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 239 பிரிவின் ஏற்பாட்டின் கீழ் 2014 செப்தம்பர் 11 திகதிய சபையின் 6.01 |

| | | | |
|---|---|---|---|
| | வதிவிடங்களிலிருந்தும், 50 சதவீதம் வியாபார தளங்களிலிருந்தும் அறவிட தீர்மானிக்கப்பட்டிருந்தது. மாதிரி பரிசீலனயிற்கமைய, குத்தகையின் 50 சதவீதத்தையேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்ககப்படாத நான்கு குத்தகைகாரர்களிடமிருந்து ரூபா 2,525,750 ஆன தொகை மீளாய்வாண்டினுள் குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | | ஒருமைபாட்டினூடாக மதிப்பீட்டு குத்தகையின் 25 சதவீதம் வதிவிடங்களிலிருந்தும், 50 சதவீதம் வியாபார தளங்களிலிருந்தும் அறவிட தீர்மானிக்கப்பட்டிருந்தது. குத்தகைக்காரர்களை தூண்டுவதற்கு மற்றும் அழுத்தத்திற்கு உற்படுத்தாமலும் இருப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இச் சபை தீர்மான்த்தினூடாக சபையின் வருமானம் பல மடங்குகளினால் அதிகரித்தாக வினையமாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் 300 அலகு நலக் குத்தகை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்காததுடன் மாதிரி கள பரிசீலனை பிரகாரம் வருடாந்த நலக் குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு முரணாக மற்றும் சபை அங்கீகாரமின்றி குத்தகை காணிகளில் நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த 10 சந்தர்ப்கங்கள் மற்றும் குத்தகை ஆதனங்கள் ஏனைய தரப்பினர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட 06 சந்தர்ப்கங்களும் அவதானிக்கப்பட்டன. | நலக் குத்தகை ஒப்பந்தங்கள் உரிய காலங்களில் புதுப்பிக்கப்பட்டு அவ் ஒப்பந்த நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு திகதியன்று 300 அலகு நலக் குத்தகை ஒப்பந்தங்களை புதுப்பிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாத போதும் தற்போது 249 அளவான ஒப்பந்கங்கள் புதுப்பிக்கும் நடவடிக்கை மற்றும் குத்தகை அறவிடும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. |

**2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்**
-----------------------------------------

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**
-----------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 1988 இல் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இல் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் சுற்றாடல் காப்புறுதி அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ளாத கைதொழில்களை இனங்காணுவதற்கு சபையினால் முறையான அமைப்பொன்றை பின்பற்றாததன் காரணத்தால் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ளாத 06 நிறுவனங்களிலிருந்து மற்றும் | சுற்றாடல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய எல்லா நிறுவனங்களுக்கும் முறையாக அனுமதிபத்திரம் விநியோகிக்க மற்றும் சுற்றாடலை பாதுகாக்க சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது சுற்றாடல் அனுமதிபத்திரம் விநியோகிக்க வேண்டிய தளங்களை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் விண்ணப்பங்கள் விநியோகிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே இந் நிறுவனங்கயிற்காக |

| | | |
|---|---|---|
| அனுமதிபத்திரம் புதுப்பிக்காத 12 நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் ரூபா 72,000 ஆக இருந்தது. கைதொழில்களினால் சுற்றாடளுக்கு ஏற்படுடம் தாக்கங்கள் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளாததனால் சபை அதிகார எல்லையினுள் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக சபையின் பொறுப்பு போதியளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவர் கட்டாய தேவையாகையினால் மற்றும் சுற்றாடல் குழுவிற்காக உரிய உள்ளடக்கத்திற்கமைய உத்தியோகத்தர்களை இணைத்து கைத்தொழல்களை பரிசீலனை செய்து சட்ட விரோதமாக நடாத்தப்படும் கைத்தொழல்களிற்காக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமொன்று தயாரிக்கப்படுகின்றது. |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபை அதிகார எல்லையினுள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 62 நிலையான விளம்பர பலகைகளினால் மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய கட்டணம் ரூபா 3,912,097 ஆனதுடன் 27 தற்காலிக விளம்பரப் பலகைகள், 17 பதாகைகள் மற்றும் 01 பெனரிலிருந்து அறவிட வேண்டிய கட்டணம் ரூபா 507,300 ஆனது. | சபைக்கு பெற வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன் று செயற்படுத்தப்பட வேண்டும். | விளம்பர பலகைகளிற்கு பணம் செலுத்தாத நிறுவனங்களிற்கு குறித்த கொடுப்பனவை செலுத்துமாறு பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் அறிவூட்டிய போதும் இதுவரை பணம் செலுத்தாத நிறுவனங்களுக்காக சட்டரீதியான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படடுள்ளது. அனுமதியின்றி காட்சிப்படுத்தப்படும் தற்காலிக விளம்பர பலகைகள் தொடர்பாக எதிர்கால்தில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 2,235,375 ஆனது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவிட வேண்டும். | 2018 சனவரி முதல் 2018 திசெம்பர் வரை ரூபா 150,000 ஆன தொகையொன்று 2019 மார்ச் 19 திகதியன்று நிறுவனத்திற்கு கிடைத்திருந்தது. |

**2.3 மிகை அறவீடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி வெளியிடப்பட்ட ரூபா 119,350 ஆன மிகை அறவீடு சான்றிதழுக்காக மேலும் ரூபா 59,350 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்தது. | மிகை அறவீட்டினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்னால் நகர ஆணையாளருக்கு விதிக்கப்பட்டிருந்த ரூபா 119,350 ஆன மிகை அறவீட்டு தொகையின் ரூபா 60,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மீதி தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

மாநகர சபை கட்டளைக் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன், அதன் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தற்போது தயாரிக்கப்படுகிறது. |

**(ஆ) சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) ஓர் தேசத்தின் கால்நடைகள் மற்றும் தாவரங்கள் போன்ற இயற்கை நீர் சுத்திகரிப்பானைக் கொண்ட இயறகை நீச்சல் தடாகத்துடன் கூடிய பொம்பகெளே நகர் பூங்கா போதிய அளவில் பராமரிக்கப்படாததன் காரணமாக தற்போது நீர் சுத்திகரிப்பான் செயலிழந்து நீர் தடாகமும் அசுத்தமாகதி எவரும் பிரயோசனப்படுத்தாத நிலைக்கு ஆகியிருந்தது. ஆரம்பத்தில் 56 | இரதினபுரியில் அமைந்துள்ள நகர பூங்காவின் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஏக்கர் அளவான நிலத்தை அளவை கொண்ட இப் பூங்கா அனுமதியற்ற நிர்மாணம், அனர்தத்திற்கு உள்ளானவர்களை குடியேறல் மற்றும் பாறிய நீர் கருத்திட்டத்திற்காக இடவசதி வழங்கியதன் காரணமாக தற்போது 35 ஏக்கர் அளவிற்கு மட்டுபடுத்தப்பட்டுள்ளது. பூங்காவின் பாதுகாப்பிற்காக 2012 மற்றும் 2015 ஆண்டுகளில் உத்தேசங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், அவ் உத்தேசங்கள எதுவும் 2018 ஆண்டு இறுதி வரை நடைமுறைபடுத்த மாநகர சபைக்கு இயலாமலிருந்தது. | | |
| (ii) | எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் பொம்பகெலய பாதுகாப்பு அரணிலிருந்து நீர் உத்தேச திட்டமொன்றுக்காக 2014 ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 02 ஏக்கர் 28.81 பர்சஸ் காணிக்காக பெறுமதி மதிப்பீட்டின் படி 30 ஆண்டுகளுக்காக ரூபா 34,009,564 ஆன குத்தகை தொகையொன்றை செலுத்துமாறு முன்னைய ஆண்டின் நீர் கருத்திட்ட பணிப்பாளருக்கு அறிவித்திருந்த போதும், நீர் கருத்திட்டத்திற்குரிய நிலம் 1978 ஜுன் 15 ஆம் திகதி வர்த்தமானி ஊடாக தேசிய நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு சுயற்சையாக ஒப்படைக்கும் உத்தேச திட்டத்தின் கீழ் ஒப்படைத்திருந்ததனால் குத்தகை செலுத்துதல் மறுக்கப்பட்டிருந்தது. குறித்த விடயம் தொடர்பில் சபை முறையான பரிசீலனை மேற்கொன்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து உரிய வரி தொகையை அறவிடுவதற்கு மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பாக உன்மை தன்மையை இனங்கண்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நீர் கருத்திட்டத்திற்காக பாதுகாப்பு அரணிலிருந்து வெட்டி அகற்றப்பட்டுள்ள மரப் பெறுமதி உடனான 71 மரங்களை மரக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைத்தமைக்கான எவ்வித தகவல்களும் சபையிடம் இல்லாமலிருந்தது. | மரங்களை அகற்றுதல் அரச மரக் கூட்டுத்தாபனத்தினூடாக மேற்கொள்ளபட்டமையை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | கருத்திட்டத்திற்காக அகற்றப்பட்டுள்ள அனைத்து மரங்களையும் அகற்றுதல் அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாரே வெட்டபட்டுள்ள அனைத்து மரக் குற்றிகளும் மரக் கூட்டுத்தாபன்த்தால் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் சபையின் எவ்வித பயன்களுக்கும் எடுக்கப்படவில்லை. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 திசம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அதற்குரிய இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை உள்ளிட்ட நீண்ட கால திட்டத்தை தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக பொது மக்கள் சுகாதாரத்தை மேன்படுத்த (2019-2022) நான்கு வருட திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்கு சொந்தமான சினிமா மண்டப குத்தகைகாரரிடமிருந்து 2001 மே 01 முதல் 2010 ஏப்பிரல் வரையான காலத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 1,953,000 ஆன தொகையை அறவிட அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க 2019 மே வரையும் சபை நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2017 ஆகஸ்ட முதல் திசெம்பர் வரையான காலத்திற்கு அறவிட வேண்டிய குத்தகை ரூபா 772,480 தொகையை அறவிடவும் சபைக்கு இயலாமலீருந்தது. | சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)(i) | நகர அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இரத்தினபுரி மகா நகர சபையின் கருத்திட்டமொன்றிற்காக ஆசிய அபிவருத்தி வங்கி கடன் உத்தேசத் திட்டத்தின் கீழ் ரூபா 54,566,853 ஆன கடன் வழங்கப்பட்டடிருந்தது. நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து இரத்தினபுரி மகா நகர சபைக்கி செலுத்த வேண்டிய வாடி வீட்டு வாடகையிலிருந்து 50 சதவீதத்தை தொடர்புடைய கடன் தொகைக்கு பதிலிடுவதாக அதன் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 29/06/24 கொண்ட 2006 ஆகஸ்ட் 31 திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும், | குறித்த பிரச்சினையை தீர்த்து நிதிக்கூற்றுக்களை சீர் செய்ய வேண்டும். | நகர அபிவருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடப்பட்டது. அறவிட வேண்டிய வாடிவீட்டு வாடகையை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன் அத் தொகையில் 50 இலட்சத்தை கடன் தவணையாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்ட கடன் தவணை அளவை உறுதிப்படுத்தாமையினால் மீளாய்வாண்டில் மொத்த கடன் தொகையை பொறுப்பொன்றாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2009 வருடம் முதல் 2013 ஆகஸ்ட் வரையான காலத்திற்குரிய அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 4,366,496 ஆன வாடிவீட்டு வாடகை நகர அபிவிருத்தி அதிகாரயிடமிருந்து அறவிட அல்லது செலுத்த வேண்டிய கடன் தொகையிற்கு பதிலிடபட்டுள்ளதா என உறுதிப்படுத்தயேனும் சபை நடவடிக்கை எடுத்திருக்காதுடன், 2013 செப்தெம்ர் முதல் 2017 செப்தெம்வர் வரையான காலத்திற்கு மேலும் அறவிட வேண்டிய ரூபா 156,121 தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பிரச்சினையை தீர்த்து நிதிக்கூற்றுக்களை சீர் செய்ய வேண்டும். | மேல் i பதில் தொடர்புடையது. அதன் பிரகாரம் உறுதிப்படுத்தல் கூற்றை பெற்றுதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் பற்றாக்குறையும் மிகையும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட அளவை விஞ்சி வேலை/ கள தொழிலாளிகள் 139 மற்றும் 76 சுகாதார தொழிலாளிகள் சேவையில் ஈடுபடுத்திருக்கையில் முறையான அங்கீகாரமின்றி முறையே 23 தொழிலாளிகள் மற்றும் 58 தொழிலாளிகள் சேவை ஒப்பந்தம் மீது குறித்த துறைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். சேவை ஒப்பநதம் மீது ஆட்ச்சேர்க்கப்பட்ட அத் தொழிலாளிகளுக்கா மீளாய்வாண்டில் ரூபா 19,287,547 சம்பளம் மற்றும் கொடுப்பனவாக செலுத்தியிருந்ததுடன் மேலதிக ஊழியர்கள் அதிகளவில் நிர்வாக அலுவலகத்தில், நூலகங்களில் மற்றும் முன் பள்ளிகளில் நிச்சிய வேலை பகிர்வியின்றி வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சேவை தேவைபாட்டிற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை திருத்த வேண்டியதுடன், மேலதிக ஊழியர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஜுலை 31 திகதி 20 தொழிலாளிகள், 2017 ஆகஸ்ட் 14 திகதி 14 தொழிலாளிகள் மற்றும் 2018 மே 01 திகதி 13 தொழிலாளிகளையும் ஆட்சேர்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 05 அரச இல்லங்களிற்காக மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வாடகை ரூபா 112,410 அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வாடகையை தாமதிமின்றி அறவிட வேண்டும். | நிலுவை வாடகை தவணை அடிப்படையில் அறவிடப்படுகிறது. |

**3.5 சொத்துக்கள் முகாமை**

**3.5.1 பராமரிப்பு மற்றும் பழுபார்த்தல் மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உரிய முறையில பராமரிப்பு மற்றும் பழுபார்த்தல் செய்யப்படாததனால் மிகப் பழுதடைந்த நிலைக்கு உள்ளாகியிருந்த மகா நகர சபைக்குரிய 06 அரச இல்லங்களை மீளாய்வாண்டு இறுதி வரையும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பராமரிப்பு மற்றும் பழுபார்த்தல்களை முறையாக மற்றும் தாமதமின்றி செய்ய வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.5.2 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் பெறப்படாமை**

சபைக்கு சொந்தமான இரத்தினபுரி, பொம்பகெளே, எதுள்ரவும் பாதை அமைந்துள்ள உயர் வணிக பெறுமதியுள்ள 05 ஏக்கர் காணியை மற்றும் அங்குள்ள கட்டிடத்தை, 02 டெனிஸ் மைதாகம் மற்றும் பெட்மின்டன் மைதானத்தை ரூபா 350 ஆன வருடாந்த குத்தகை வாடகைக்கு 33 வருட காலத்திற்கு 2000 நவம்பர் 21 திகதிய மற்றும் இலக்கம் 1603 கொண்ட குத்தகை ஒப்பந்தம் மூலம் இரத்தினபுரி சட்டத்தரனிகள் சங்கத்திற்கு நீண்ட கால குத்தகை வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான சொத்தொன்றை வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்குகையில் அறவிட வேண்டிய குத்தகை வாடகை பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் மீது தீர்மானிக்க வேண்டியதுடன், 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் அதன் மதிப்பீட்டு குத்தகை வாடகையை திருத்த வேண்டும். மதிப்பீட்டொன்று இல்லாமல் குறித்த சொத்துக்கள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், குத்தகை காலம் 18 வருடங்களை கடந்திருந்த போதும், குத்தகை வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புதாரர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை ஏடுக்க வேண்டியதுடன், ஒப்பந்தத்தை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 33 வருடங்களுக்கு குறித்த மொத்த குத்தகை வாடகையாக ரூபா 11,550 உரிய தரப்பினரால் 2006 திசெம்பர் 08 திகதி சபைக்கு செலுத்தியருந்த போதும், நகரபிதாவின் 2007 ஒக்தோபர் 12 இலக்கம் ர.ம.ச/வெஅ/02/44 கடிதம் மூலம் குத்தகை ஒப்பந்தத்தை திருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் அது தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கும் வரை அத் தொகையை பொறுப்பேற்தாகவும் அறிவித்து காசோலையை திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. எனினும் 2018 திசெம்பர் வரை குறித்த ஒப்பந்தத்தை திருத்த அல்லது குத்தகை பணத்தை அறவிடயேனும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்புதாரர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஒப்பந்தத்தை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் கட்டிடத்தை வாடகைக்கு வழங்கி சங்கத்தினால் ஈட்டப்பட்ட வருமானத்திலிருந்து 2/3 யினை சபையிற்கு செலுத்த வேண்டிய போதும், 18 ஆண்டு குத்தகை காலத்தினுள் எவ்வித வருமானமும் சபைக்கு செலுத்திருக்க வில்லை. | பொறுப்புதாரர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஒப்பந்தத்தை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.5.3 வாகன பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 ஆண்டு முதல் 05 ஆண்டு வரையான காலமொன்று ஓட்ட நிலையில் இல்லாதிருந்த 08 வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்தவோ அல்லது வேறு உரிய நடவடிக்கையொன்று எடுத்திருக்கவில்லை. | பழுதுபார்ப்பது மற்றும் பராமரிப்பு தாமதமின்றி மேற்கொள்ள வேண்டியதுடன், ஏலவிற்பனைக்கு பரிந்துரைக்கப்பட்ட வாகனங்களை முறையாக ஏலவிற்பனை செய்ய வேண்டும். | 04 கை டெக்டர்கள் மற்றும் கார் வண்டியொன்றும் முதலில் ஏலமிடப்பட்டதுடன் விற்கப்படாததனால் 2019 ஆண்டு ஏலத்தில் விற்க மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. மீதி 03 வாகனங்களையும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆண்டின் விபத்திற்குள்ளான சபைக்கு சொந்தமான நோயாளர் ஊர்த்தி பழுதுபார்ப்பதற்காக ரூபா 176,324 செலுத்தப்பட்டிருந்ததுடன் ககாப்புறுதியினால் ரூபா 114,232 ஆன தொகை மாத்திரம் மீள் நிரப்பல் செய்யப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் முறையான பரிசீலனையொன்று நடாத்தப்பட்டு பொறுப்பாளர்களை தீர்மானித்து நட்டத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மட்டுப்படுத்தப்பட்ட இரதினபுரி மாவட்ட கூட்டுறவு நெசவு தொழில் சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான 35.5 பர்சஸ் இல் 4.95 பர்சஸ் அளவு 2009 ஆண்டில் மீண்டும் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் மீதி காணியினை சட்டபூர்வமாக சுவீகரிக்க மீளாய்வாண்டு இறுதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 2014 ஆண்டின் போது சுவீகரிக்கப்பட்டு மீண்டும் குத்தகை வழங்கப்பட்ட ஆதத்தினுள் உள்ள கட்டிடத்தை குத்தகை ஒப்பந்தத்திற்கு மாற்மாக மற்றும் சபை அனுமதியின்றி ஒப்பந்தகாரரினால் அகற்றி புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | எஞ்சிய காணிப் பகுதியை சுவீகரிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தத்தை மீறியது தொடர்பாக பொறுப்புதாரர்களை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் காணியின் எஞ்சிய பகுதியை மீண்டும் நகர சபைக்கு ஒப்படைக்குமாறு அவ்வப்போது அறிவித்துள்ள போதும் அதனை முறையாக ஒப்படைத்திருக்கவில்லை. இது தொடர்பாக கூட்டுறவு ஆணையாளரிற்கு காணியை முறையாக ஒப்படைக்குமாறு அறிவித்து அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன்.<br>இக் கட்டிடத்தை குத்தகைக்கு வழங்கிய சில தினங்களில் பழுதுபார்கையில் அதன் சுவர் உடைந்து விழுந்ததாகவும் அது பற்றி முன்னால் நகரபிதாவிற்கு அறிவித்து திட்டமொனறை தயாரித்து அதனை 2014 ஒக்தோபர் 09 ஆம் திகதி இடம் பெற்ற திட்டமிடல் குழுவில் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டதாகவும் பழைய சலுபிலிசல கட்டிடத்தை குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்த மேற்பார்வைக்கி நியமிக்கப்பட்ட குழுவிற்கு சமூகமலித்த ஒப்பந்தகாரரினால் குறிப்பிடப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | | அதன் பிரகாரம் சபைக்கு சொந்தமான இடமொன்றிற்கு வெளித்தரப்பினர் ஒருவருக்காக திட்டமொன்றை அங்கீகரித்து வழங்குதல் பிழைகளுடன்கூடியதாகும். |
| (ஆ) | விலை மனு கோரிக்கையின் 07 நிபந்தனை பிரகாரம் கட்டிடத்தின் நவீன மயமாக்கல் பூர்த்தியான பின் அரச பெறுமதி மதிப்பீட்டாளரினால் நிமிக்கப்படும் மாதாந்த வாடகையை ஒப்பந்தகாரர் செலத்த வேண்டிய போதும் புதிய பெறுமதி மதிப்பீடு 2019 மார்ச் வரை தாமதமாகியதுடன் 2014 ஆண்டு முதல் ரூபா 20,000 ஆன மாதாந்த வாடகை மாத்திரம் அறவிடப்படுகிறது. | அரச மதிப்பீடு பிரகாரம் அறவிட வேண்டிய வாடகையை நிலுவையுடன் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் ஒப்பந்தம் மேற் பார்வை குழுவின் 2018 திசம்பர 05 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் எடுத்த தீர்மானத்திற்கமைய 2014 ஆண்டை அடிப்படையா கொண்டு 2019 மார்ச் 08 ஆம் திகதி புதிய மதிப்பீடு பெறப்பட்டுள்ளதுடன் அம் மதிப்பீட்டின் பிரகாரம் 2014 ஆண்டிலிருந்து நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

**3.7 பெறுகை**

------------

**பெறுகைகள் திட்டம்**

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 3,624,290 ஆன பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

--------------------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------------

பின்வரும் காரணங்களினால் வருடாந்த பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனம் ஒன்றாக பயன்படுத்திக் கொள்ள சபைக்கு இயலாமலிருந்தது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 62 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 45,065,000 ஆன மொத்த | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கும் அவ் ஒதுக்கீடுகளை பயனுள்ளதாக | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடும் மீதியாக இருந்தது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | மீளாய்வாண்டில் 38 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 14,242,000 ஆன மொத்த ஒதுக்கீட்டின் 80 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை வீச்சலவான மீதி காணப்பட்டது. | திட்டமிடலுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கும் அவ் ஒதுக்கீடுகளை பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபரகமுவ மாகாணத்தின் மாகாண பாதைகள் அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாதுறை அமைச்சின் ஒதுக்கீடு மீது சபையினால் 2007 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை 04 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 2,822,902 செலவின் கலுகங்கை அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நகர பூங்கா புற்கள்வளர்ந்து அழிவுற்றிறுந்ததனால் உரிய முறையில் பராமரித்து பிரதேச மக்களின் நலன்கள்ுக்காக ஈடுபடுத்துமாறு மாகாணத்தின் மாகாண பாதைகள் அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாதுறை அமைச்சின் செயலாளரால் 2010 செப்தம்பர் 21 ஆம் திகதி இரத்தினபுரி மாநகர சபையின் நகரபிதாவிற்கு ஆலோசனை வழங்கியிருந்த போதும், 2019 மே வரையும் குறித்த நகர பூங்காவை பயனுள்ளதாக பயன்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்திட்டங்களை ஆரம்பிக்க முன் சாத்தியபாட்டு ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டியதுடன், நிதியங்களை பயனுள்ளதாக உபயோகிப்பது தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். | இந்த வளவை சிறுவர் பூங்காவிற்காக தயாரிக்கப்பட்டிருந்த போதும் அவ்வப்போது ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பூங்கா பல சந்தர்ப்பங்களில் கழுவப்பட்டுச் சென்றுள்ளது. மேலும் இந்த பூங்காவை பயனுள்ள இடமாக்குவதற்கு பல திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு திட்டமிட்ட போதும் அதனை செயற்படுத்த முடியாமலிருந்தது. எனினும் தற்போது இரத்தினபுரி நகரத்திற்கு அத்தியவசமான விடயமொன்றான வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடமொன்றாக ஆக்குவதற்கு திட்டங்கள் தற்போது தயரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஆசியா அபிவிருத்தி வங்கி கடன் கருத்திட்டம் - 1632 ஸ்ரீ (எஸ்எப்) இன் கீழ் அமுல்படத்தப்பட்டிருந்த நகர அபிவிருத்தி மற்றும் குறை வருமான வீட்டுத்திட்டம் ஊடாக இரத்தினபுரி வெரலுப பாதை 2005 ஆண்டின் போது அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதற்காக சபையினால் செலுத்த வேண்டியதாக | கடன் தொகை தெடர்பிலான பிரச்சினைகளை தீர்துக்கொண்டு நிதிக் கூற்றுக்களை சரி செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் இந்த கடன் தொகையை தீர்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த கடன் தொகை ரூபா 12,656,450 ஆனது. மேற் குறிப்பிட்ட பாதை உரிய முறையில் அபிவிருத்தி செய்யாத காரணத்தால் மீளாய்வாண்டு வரையும் பாதையை சபைக்கு சுவீகரிக்கப்பட்டில்லாததுடன், கடன் தொகையை செலுத்துவதற்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மொத்த கடன் தெகையையும் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் முன் கொன்டுவரப்பட்ட போதும் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள சபை எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவிவல்லை. | | |
| (இ) | இரத்தினபுரி, தெமுவாவத, நகர சபை பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு மாடி கட்டிடத்திற்காக 2011 செப்தம்பர் 08 ஆம் திகதி அனுமதியற்ற கட்டளையொன்று அனுப்பப்படிருந்த போதும், கட்டிடத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லாததுடன் 2012 மே 09 ஆம் திகதி அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு பணிப்பாளரின் கடிதம் பிரகாரம் அக் கட்டிடத்திற்காக சபையின் திட்டமிடல் குழுவின் அங்கீகாரத்தை பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஜுலை 17 ஆம் திகதி அக் கட்டிடத்திற்கான விண்ணப்பம் சபைக்கு கிடைத்திருந்த போதிலும், கட்டிடம் நியம அளவுத்திட்டங்களுக்கு இணங்காமைனால் திட்டத்தை அங்கீகரிக்க முடியாமலிருந்தது. 2019 மே வரையும் தொடர்புடைய கட்டிடத்தை அகற்றுவதற்க சபை இயலாமலிருந்ததுடன், அதற்காக நிதிமன்றத்தில் அனுமதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் துரிதமாக்க வேண்டும். | 1982 இன் 07 ஆம் இலக்க மற்றும் 1984 இன் 44 இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1978 இன் 41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 23(5) பிரிவு பிரகாரம் உள்ளூராட்ச்சி நிறுவனங்களுக்கு உனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குவதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. எனினும் 2016 மார்ச் 28 ஆம் திகதி இரத்தினபுரி மேலதிக நீதவான் நீதிமன்றத்தின் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இலக்கம் 31221 இன் வழக்கு தீர்ப்பு பிரகாரம் இரத்தினபுரி மாநகர சபைக்கு நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் கீழ் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு அதிகாரம் இல்லையென தீர்மானிக்கப்பட்டு கட்டளையொன்று பிரபிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இக் கட்டளையை நீக்கிக்கொள்ள உயர் நீதிமன்றத்திற்கு விடயங்களை முன்வைக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறுது. அந்த உயர் நீதிமன்ற தீர்மானம் பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய கூட்டுத்தொகை ரூபா 5,070,839 ஆன 02 கணக்கு மீதிகளை பரிசீலனை செய்வதற்காக தகவல்களை சமர்ப்பித்திருக்கவில்லை. | கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் பருவகால அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |